
உ

ஓம்

சிவமயம்

சரவணபவாயநமஹா



சதுரகிரி

# மகாலிங்கமூர்த்தி

## பதிகமும் மகத்துவக்கும்மியும்.

ஆனந்தக்களிப்பும்.

இஃது

திருமங்கலம்
வைசியகுலதிலகராகிய
காமாக்ஷி செட்டியாரவர்கள்
குமாரர்

**வீரபத்ர சிவானந்த யோகியால்**

இயற்றப்பெற்று

திருமங்கலம்
ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்க பெற்றது.

1914


OFFICE OF THE REGISTRAR ... MADRAS
Q23:38.2H5N
N14
125117

உ

ஓம்

சிவமயம்

சரவணபவாயநமஹா



MADRAS

சதுரகிரி

# மகாலிங்கமூர்த்தி

## பதிகமும் மகத்துவக்கும்மியும்.

இஃது

திருமங்கலம்

வைசியகுலதிலகராகிய

காமாக்ஷி செட்டியாரவர்கள்

குமாரர்

**வீரபத்ர சிவானந்த யோகியால்**

இயற்றப்பெற்று

திருமங்கலம்

ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்க பெற்றது.

1914

உ ஓம்
சிவமயம்
சரவணபவாயநமஹா

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்குந் தெரிவிப்பது யாதெனில்.—

திருமங்கலம் காமாக்ஷி செட்டியாரவர்கள் குமாரரும் வீரபத்ரசிவானந்த யோகியும் ஜோதிட சித்தாந்தியுமான கா. வீரபத்திரஞ்செட்டியாராகிய என்னால் சதுரகிரி மகாலிங்க மூர்த்தி பதிகமும் மகத்துவக் கும்மியும் இயற்றப் பெற்றும் அச்சிடப் பெற்றும் கெவர்ண்மெண்டில் ரிஜிஸ்தர் செய்திருப்பதால் ஷை புத்தகத்தை அச்சிடவிரும்புகிறவர்களும் அச்சுக்கூடத்தலைவர்களும் 1887 வருடத்து 25-வது ஆக்டின் 20 வது பிரிவில் 6-வது விதியின்படி எம்மால் கோரும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவுமிருப்பார்களென்று யாவரும் கவனிப்பீர்களாக.

இப்படிக்கு

வீரபத்திர சிவானந்த யோகியாகியும்
சோதிட சித்தாந்தியுமாகிய

**வீரபத்திரஞ்செட்டியாரவர்கள்.**

திருமங்கலம்

ஓம்

சிவமயம்

சரவணபவாயநமஹா

சதுரகிரி

# மகாலிங்கமூர்த்திபதிகம்

## ஆசிரியம்:

ஆதியே யொருதனியநாதியே வேதமுத
லற்புத சடாட் சரமெலாம்
அருளாகியண்ட முதலெண்டிசையெலாம்யாவு
மணுவினுக் கணுவானவா
நீதியேயன் பரகவமுதினி னுமமுதாய்
நிறைந்த பெருவெளியினொளியே
நித்தனே முத்தனே பத்தர்பணி கர்த்தனே
நிமலனே பரிபூரண
சோதியே சிவ சம்புசங்கர மகாதேவ
சுத்த சித்தான வித்தே
சொல்லொணாப்பேரின்ப வெள்ளமேகள்ளமில்
சுயம்ப்ரகாசப் பொன்மணியே
மாதிரந்தனிலுனது மைந்தனேனையென்
வறுமைநோய் தீர்க்கவருவாய்
மகிமைதருநிறை சதுரகிரியிலுறை சுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே க

தானுயெழுந்த மெய்ச்சத்தி யுமைபங்கனே
சச்சி தானந்த ரூபா

# சதுரகிரி மகாலிங்க மூர்த்தி பதிகம்.

சகலகலைவல்லவா மந்திரசாடாட்சரா
சந்த்ர சேகர மூர்த்தியே
ஆறாகத்து ளருளானகுரு தேசிகா
அப்பனே யொப்பிலாத
அமுதமே கருணைகிருபா கராமௌனதேசோ
மயானந்த வடிவே
தேனனவார்த்தையுரைமோகமங்கையர்கள்வலை
சிக்கியானலைவு ராமற்
செம்பொனடி நம்பினேனன் பரகவன்பனே
தேசுலாவிய வாசனே
வானவர் வந்துபணிமாணிக்கதீபமே
மைந்தனெனை ரட்சிசமையம்
மகிமைதரு நிறைசதுரகிரியி லுறைசுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே உ

மூலவரை மேலாறுபதி யாகியப்பதி
முகிந்த சுழிமுனையதாகி
மோனபரவெளியினில ரூபவுருவொளிவான
முக்கண் துலங்கு சிவமே
ஆலமுண்டருள் நீலகண்டனேசகலசீ
வாத்மவஸ்து தயமயமே
ஆனந்தவடிவே நிராமய நிராதார
வத்விதசிதாகாயமே
காலனையுதைத்தன்பருக்கன்புதருகின்ற
கருணைவிளைகிருபைமுகிலே
கனகசபை நடனமிடு சின்மயசுயம்புப்ர
காசந் துலங்குபரமே

வாலைபிராமிசிவகாமியுடன்விளையாடி
வரவேணுமிதுசமையமே
மகிமைதருநிறைசதுரகிரியிலுறைசுந்தர
மகாலிங்கமெய்க்கடவுளே ௩

ஓமென்ற பிரணவ மூலாதார வெளியதனி
லொளிகண்டு பரமகுருவின்
உண்மைபெற்ற தன்மீது நாற்சதுரபீடமிசை
யுறுபிரமனடியை வாழ்த்தி
நேமமொடு சென்னமரணுதியற் றென்னூறு
நீங்காதமணிபூரக
நிலமைசேர்ந்தனுதின மிலக்குமிசமேதனும்
நெடியமால் பதம்வணங்கிச்
சேமநிதியோகசம்பத் தடைந்தனைகதஞ்
சேர்ந்ததனிலின்பமுற்றுச்
சின்மயவிலாசம் படைத்த சட்கோணஞ்
சிறந்த மணிகண்ட வழியாய்
மாமதிதிகழ்ந்த பரிபூரண சிவானந்த
வாழ்வு தந்தருள் புரிகுவாய்
மகிமைதரு நிறைசதுர கிரியிலுறை சுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே ௪

அலையேறுசிறுதுரும் பென்னவுடல் நித்திய
மலைந்து சஞ்சல மாவதால்
அனலிலிடு மெழுகுபோலுருகி மனம்வாடியே
யஃதியுற்ற னியாயமாய்க்
கலையேருபிராண வசுகானந்தமதியுங்
கலங்கி வாணுட் குறைந்து

காமமாதியமாய வஞ்ஞான துன்பக்
கடற்குளே வீழ்ந்தழுந்தி
நிலையேதுமறியாத துன்மார்க்கரிஷ்டமே
நீங்காது நேயமுற்று
நிதமுண்டுறங்கு வதையல்லா திவ்வுலகுதனில்
நிசமில்லை யென்றெண்ணுயான்
மலையாதுனருள்பெருகி யென்னுளுமழியாத
மௌனபத வாழ்வுதருவாய்
மகிமைதரு நிறை சதுரகிரியிலுறை சுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே ௫

பிள்ளையினதருமை பெற்றோரறிவதன்றிப்
பெராப்பேதை யறிவார்களோ
பெருமையினையறி வுடையமூதோர்களன்றிப்
பிசாசகுண ரறிவார்களோ
சள்ளையென்றே தேனுமுயலுவதை நீக்கிடிற்
றண்மையதிலறிவார்களோ
சாந்தகுண சகிதநித்யானந்த மாம்பிரம
சன்னிதானங் கருதினோர்
கொள்ளைகொண்டு யிர்வாதை செய்கின்ற துஷ்டக்
கொடும்பாவ மூதேவிகள்
கூட்டத்துடன்பழகி வீணாட்கழிப்பரோ
கூறு நான் மறையினமுதே
வள்ளலே மணிமந்த்ர சஞ்சீவிபீடமே
வாய்த்துச் செழித்தபொருளே
மகிமைதரு நிறைசதுர கிரியிலுறை சுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே ௬

ஒருநேரமையனின் பாததாமரை மலரை
யுள்ளத்திருத்த நினேவேன்
உலகவாட்கைச் சகசமானது கலந்துவரி
லொன்றேனு நிலமையறியா
வெருவாய்ப் பினத்தலறிவேன் மாதர்மையலில்
வீணுய்த்திரிந்துழலுவேன்
மிக்கபசிவந்து போராடுவேளையிலன்னம்
வேண்டிப் புசிக்கமுயல்வேன்
விருதாவினிற்று யின்றும் பலது துன்பங்கள்
விளையுமாசையினி லாழ்ந்து
மிகவேயுழைத்து வாணுட் கழித்திட்டமுழு
வெறியனெனினுந் தடுத்து
மருவார் முகிற்குழல் சிவானந்திபாகமாய்
வந்தாள வேண்டுமையா
மகிமைதரு நிறைசதுர கிரியிலுறை சுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே ள

அன்னைதந்தையர் பெண்டுபிள்ளை சுற்றந்தமைய
ணுதிமித்துரு சகிதமாம்
ஆசைவேண்டேன் வேண்டிடிற் சகல துன்பங்க
ளணுகிடு மலாற்றர்மநூல்
முன்னையோராற் புகலுபின் பிறப்பினுவந்து
மூண்டிடும் பழமை வினையாய்
முத்திநெறியேகு மனதைத்தடுத்தே மாயை
முன்வந்து மூழ்குவிக்குந்
தன்னையறியப் புகுந்தொரு சாணுயர்ந்திடிற்
ருழ்த்திடு மிரண்டுசாணிற்
தக்கோர்கள் பணிவிடையினிற் செலவிடாதிஃது
சகசமாம் வாட்கை யையா
மன்ன நினதருளை யனுதினமு மகலாதெனது
மனதுள் நிறைவுறவேண்டுவேன்
மகிமைதரு நிறைசதுர கிரியிலுறை சுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே அ

பூவிலிச்சென்னன வரையனுபவித் திட்டசுக
புண்ணியம் பாவமெல்லாம்
போதுமினிமேல்யாதுசெனனமும்வேண்டிடேன்
பொய்க்கழவு சூதுவேண்டேன்
பாவிகளுடன்கூடிவாழ்தல்வேண்டேன்முறைமை
பழகு மடவாரை வேண்டேன்
பழமறைகள் புகலுவ தறிந்து நினையறியாத
பாதகர்களுறவு வேண்டேன்
கோவில்குளமுணராது மணிமந்த்ர மோதுங்
குணக்கேடர் நட்புவேண்டேன்
குருபாதகமலமலரெனது மணிமுடிசூடு
கொள்கை யெப்பொழுதும் வேண்டும்
வாவிகமழ் தேனருவி பாயுபுனல் மேகமே
வந்தருள வேண்டுமையா
மகிமைதரு நிறைசதுர கிரியிலுறை சுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே கூ
இந்திரவி யொன்ருகி மூனைமீது சென்றுகொண்
டேகாந்த கேசரத்தில்
எட்டிரண்டேக வடிவாமௌனமா வாக்ய
வெல்லைதுரியா தீதவா
நந்தவாரிதிநற் பெருக்கெடுத் தென்னுளும்
நானுண்டு செயல்மிகுத்த
ஞானசிந்தாமணிப் பீடமெந்திரசிகா
நாதபொற்பீட மத்தி
இந்த்ராதி முனிவோர்களுறு கற்பதாருவி
லிளைப்பாறி யினிதிருந்து
எங்கும்ப்ர காசச் சுயஞ்சோதி நீழலி
லெழுந்த பதசேவைதருவாய்
வத்தகாமனையெறித்துச் சண்டனுயிரழிய
மாட்டிவன் றெண்டர் தழைய
மகிமைதரு நிறைசதுர கிரியிலுறை சுந்தர
மகாலிங்க மெய்க்கடவுளே ௰

முற்றிற்று

உ

சிவமயம்

சிவமயம்

சரவணபவாயநமஹா.

சதுரகிரி

# மகாலிங்கமூர்த்தி

## மகத்துவக்கும்மி.

கும்மியடிபெண்காள் கும்மியடிசிவ
கோமானைப் போற்றியே கும்மியடி
நம்மையாளு மகாலிங்கமூர்த்திபதம்
நாடிக்கும்மி யடியுங்கடி (க)

சீர்பெருகுஞ் சதுரகிரிக் கும்மி
சிரப்புடன் சொல்லித்தினந்துதிக்கக்
கார்பெருகு மதவாரணன் சேவடி
காப்பென்று கும்மி யடியுங்கடி (உ)

சுந்தரமேவு மகாலிங்க மூர்த்தியைத்
தோத்தரித்துக் கும்மிதான்பாடச்
சந்ததமுந் தொண்டர் போற்றுஞ்சடாட்சரச்
சண்முக நாதனின்றூழ் துணையே (௩)

மேலோர்கள் வாளுஞ் சதுரகிரியில்
விழங்குமகாலிங்கர் கும்மிசொல்ல
நால்வேத நாயகமாக நிறைந்திடும்
நாமகள்பாதத்தை நாடுவோமே (௪)

பெண்ணரசேகேளாய் சஞ்சீவிமேர்வின்
பாபல மென்னுல் தெரிந்தமட்டுங்

கண்ணேபுகல்வேன் மகிழ்ச்சியுட னீங்கள்
கருதிக்கும்மியடியுங்கடி (ரு)

சென்னைராஜதானிப் பாண்டியநாடு
சிறந்தமதுரைச் சில்லாவினிலே
கன்னிதிசை நாலு காதவழியினிற்
காமயராசனரசாட்சி (சா)

மாதமும்மாரி மழைபொழிந்துகுளம்
வாவிகளேரி பெருக்கெடுத்துச்
சேதமில்லாமல் நவதானியமுதற்
செந்நெல்விளைந்து செழித்தோங்கும் (எ)

பூங்கமுகு தென்னை தேக்கு பனைமரம்
புன்னை யிலுப்பை யரசு புளி
வேங்கை வெட்பாலை புரசிலுமிச்சை
மிகுங்கொய்யா மாதுளை பேரீத்து (அ)

கோங்குடனோங்கி வளர்ந்து தழிர்ந்து
குளிர்ச்சிபெருஞ் சோலைமாவனமே
மாங்குயில் கிள்ளை மயிலாணும் பெண்ணு
மகிழ்ந்துரவாடி மருகுவதால் (கூ)

செந்திருமாது செழித்தோங்கி எங்குந்
திகழ்ந்தமாமலைச்சார் புகளும்
பந்தி பந்தியா யிமையமலைமுதற்
பகருதென்கடாசிவரையும் (௰)

நீண்டகிளைகள னேகங்கிரியில்
நிலமை யிதன் பேர்சதுரகிரி
தாண்டவமாடு மகாலிங்கமூர்த்தி
சதாசிவமாகவே வீற்றிருப்பார் (௰௧)

இந்தக்கிரியின் மகத்துவஞ்சேடன்
இசைப்பதல்லால் மற்றிங்கார்புகல்வார்
எந்தநாளுஞ் சதாமுப்பத்திரெண்டறம்
இலங்கிஎங்கும் நிறைந்திருக்கும் (௰உ)

வேங்கை கரடி புலி சிங்கம் யானை
விதவிதமான்கள் முயலேனம்
பாங்குள்ளகாண்டா மிருகமுதலாய்ப்
பரவியொன்றோ டொன்று கூட்டமதாய் (௰௩)

எக்காலத்தும் பகையில்லா துரவாடி
ஏகபோகமாக வீற்றிருந்து
முக்காலுமோர் துறை நீரருந்துமுளு
முதல்வன்றன் செயல் நீதியதால் (௰௪)

ஆறுகுளங்கள் சுனைபெருங்கேணி
அருமையுதக மனேக முண்டாம்
கூரிடுமன்னங்கள் புள்ளினங்கூடிக்
குலாவிடுநீர்வள முக்கியமாம் (௰௫)

புண்ணிய தீர்த்தங்கள் மெத்தவுண்டு மங்கே
பொருந்துஞ் சேத்திரமுக்கியமே
எண்ணியவெண்ணங்களெல்லாஞ்சித்தியென்று
இசைந்து கும்மியடியுங்கடி (௰௬)

பாவூற்று நாவலர் வாழ்த்திப்பணியும்
பரமசிவஞான தேசியவர்
மாவூற்று வேலவரங் கிருந்தாரம்
மகத்துவமென்னென்று சொல்வதடி (௰௭)

கன்னிமார்பீடத்திருக் கோவில்தைக்
கண்டுகழிப்பார் சிவயோகி

உன்னிமனதில் மகிழ்ந்து கொண்டாடி
யுகந்துகும்மியடியுங்கடி (௰௮)

சந்தனமாமகில் தேவதாரமணுஞ்
சாருமசோகுபலாமகிளுஞ்
சொந்தமதாகச் சுயம்புவடிவமாஞ்
சோதிவிருட்சமதின் மகிமை (௰௯)

சொல்லயெவரால் முடியுமடி மெத்தத்
தூரஞ் செழித்துக் கிளைதழிர்த்து
வல்லமையாகி மதுரம்பெருகி
வளர்ந்திடும் வானமட்டுமெழாவி (௨௰)

போற்றிடுமன்பர்கள் தீவினையாவும்
பொரிபட்டபஞ் சதுபோற்பரக்க
மாற்றிடுமேநமன் வாரா மற்கார்த்து
மகிழச்சியுடன் றேகசித்திதந்து (௨௧)

நாலாயிரத்து நானூத்தி நாற்பத்தெட்டு
நாளுவியாதியுமண்டலத்திற்
பாலோடருந்திச்சிவயோகவாள்க்கையைப்
பற்றிப்பதனமதாய்க்குகையில் (௨௨)

மேவிப்பரமனருள் வேண்டி நித்தம்
வேதாந்தமாகவே வீற்றிருந்தால்
ஆவிக்கிமோசம் வராதுமெய்ஞ்ஞானி
யவரேஜெகத்தை அரசாள்வார் (௨௩)

நரைதிரை மூப்புச்சாக்காடுமில்லையது
நாதாந்தசஞ்சிவிப் பொக்கிசமாம்
கரையாதுசிந்தைகலங்கா தென்னுளுங்
கயிலாசமேற்றிடுங் கற்பகமே (௨௪)

கற்பகமென்றுலு மைந்துவடிவங்
கதித்துத்தனித் தனியாயிருக்கும
அப்படியல்லவி துமர மொன்று
யதனிலையைந்து வடிவாகும் (உரு)

ஆனதினுற்பஞ்சதருவுமொன்ருகி
யதுவேதனித்து வேறொன்றிலதால்த்
தானுகியே கசாட்சாத்காரமாகிய
சட்டைநாதர் சிவலிங்கமதாய் (உசா)

மானுளன்ன பூரணியம்மன் சுந்தர
மாதவச்சீடனுடன் பொருந்த
வானவர் தேவர் முனிவர் தபோதனர்
மானிலத்தோர்கள் நிறைந்தோங்க (உஎ)

ஞானுகாரபெருஞ் செல்வமிகுத்து
நலந்திகழன் பர்நிதமருந்தக்
கானக மெங்கு முளைத்த மகாலிங்கங்
கண்டாலோடிவிடும் பாசவினை (உஅ)

ஆகாய மட்டுமழாவி வளர்ந்த
ததன்பேர் பலாமரத்தினடியில்
வாகாயமர்ந்துவரங் கொடுத்தாளும்
வரதன் கருப்பணஸ்வாமியவர் (உகூ)

மாதவத்தோர்க்கு வரம் பெருகவேண்டி
மாசுவராவிதமுன்னிருந்து
போதநிறைந்திடச் சர்க்குருபோலவே
போதிப்பர் மற்றவர் யாவருக்கும் (௩0)

உள்ளத்தில்ஞான வொளியாகியுண்மை
யுள்ளவர்க்குத் துணையாயிருப்பார்

கள்ளமனத்தை யுடையகசட்டரைக்
கண்டித்துத் தண்டனை செய்திடுவார் (௩௧)

பாவிகளானாலும் வந்துபணிந்தவர்
பாதகந்தீர்த்துப் பதங்கொடுப்பார்
சேவித்திடாவண்டமூடரையாவி
சிதைத்து வுருவைச்செகுத்திடுவார் (௩௨)

வல்லமைகாரனடியார்க் கடியவன்
வம்பர்க்குவம்புள்ள மாசமர்த்தன்
எல்லவர்க்கும் பெரியோனிவன் சேவடி
யேத்திக்கும்மியடியுங்கடி (௩௩)

அங்குகனைபெருமை விருட்சமொன் றுண்
டாருமரியார்கள் மானிடர்கள்
தங்குநிலை தெரியாது பரமாகித்
தன்னையரிந்தவரே யுணர்வார் (௩௪)

எத்தனையோ கோடா கோடிசுனைக
ளிருக்குது மாமலைசுற்றிலுமே
அத்தனையுஞ் சிவதீர்த்தமென்றே முன்னோ
ராராய்ந்து சொன்னார் களாகையினால் (௩௫)

அந்தச்சுனைகளிற்றோய்ந்திடிற்பாவ
மகன்றுசுத்ததேக மாகிடுவார்
பந்தமறுக்கும் பதங்கொடுக்கும்வேதை
பண்ணுமகத்துவ மெத்தவுண்டாம் (௩௬)

எண்ணிக்கையில்லாத மூலிகையாவும்
இசைக்கவென்றால் முடியாதுகண்டாய்
கண்ணினிற்காணுவ தெல்லாஞ் சஞ்சீவியாய்க்
காரணங்கூறினர் மாமுனிவர் (௩௭)

பொங்குஞ் சுனையிற்படிந்து தீர்த்தமாடிப்
புண்ணியதேகமாய் நீரணிந்து
மங்குதலில்லாது சுந்தரமூர்த்தியை
வாள்த்திக் கும்மியடியுங்கடி (௩௰)

எங்குஞ்சிவமா எழுந்த மகாலிங்கம்
ஏகவடிவாயிசைந்த லிங்கம்
பங்கமில்லாத சுயம் புலிங்கமது
பாவிக்கிக்கிட்டாப் பரமலிங்கம் (௩௧)

175117

சொக்கலிங்கம் நவரத்தினலிங்கந்
தொழுவோர் வினையைத் துரத்துலிங்கம்
அக்கருகொன்றை சூடுலிங்கம்புலி
யாடையணிந்த சிவாத்மலிங்கம் (௪௰)

நாடுவோர்தங்களை நல்லன்பராக்கி
நடுவில்நிறைந்த நாதாந்தலிங்கம்
தேடும்பழமை யடியாரறுந்திடு
தெள்ளமுதாகிச் சிரந்தலிங்கம் (௪௧)

உத்தமலிங்கமுயர்ந்தலிங்கமறை
ஓதுமகத்துவ மானலிங்கம்
பத்தரைமாற்றுயிரத் தெட்டுமாற்றும்
படிகலிங்கஞ் செகசோதிலிங்கம் (௪௨)

முக்கண்ணுஞ் செஞ்சடையாகத்துலங்கிய
மூர்த்திலிங்க மிடப்பாகமதில்
மைக்கண்ணியம் மைசௌந்தரியமபிகை
வாலைப்புவனையணைந்த லிங்கம் (௪௩)

ஏகவுருவாயிரண்டாகி மூன்று
மிசைந்தபஞ்சாட்சரமாறெழுத்தாய்

ஆகமம்போற்று மஷ்டாட்சரமாகி
அணுவிற்கணு வாயமர்ந்தலிங்கம் (௬௪)

எண்பத்திநான் குலட்சம் யோனியாவும்
இருக்கெசுர்சாமமதர் வணமாய்ப்
பண்புற்று ஆதிநடு வந்தமாகிப்
பரப்ரமவட்சர மானலிங்கம் (௬௫)

தன்னையன்றி மற்றொருவரில்லாத
தனிமைலிங்கஞ் சங்கரலிங்கம்
பொன்னைப் புவியைப் புகழைத்தருகும்
புனிதலிங்கங் குருஞானலிங்கம் (௬௬)

இந்துரவிசுழி மூன்று மொன்றாகி
இணைத்துப் புருவத்தியங்கு லிங்கம்
வந்துதிரும்பிச் சதுரகிரியில்
வளைந்துற்ற மோனவடிவ லிங்கம் (௬௭)

பன்னிருகாலாய்ப் பரந்துகலைகள்
பதினாறதாகப் படைத்தலிங்கம்
சென்னிநடுவிற் சிதம்பரபீடத்தின்
சிற்சபையாடிச் செழித்தலிங்கம் (௬௮)

காலனைக்காலா லுதைத்த லிங்கமார்க்
கண்டாரைக்காக்க வெழுந்த லிங்கம்
ஆலமுண்டு தொழுதேற்றிய அண்டரை
ஆட்கொள்ளவந்த வமுர்தலிங்கம்

எம்பெருமானென தாத்மவடிவாய்
எனைத்தொண்டி லேற்று இகபரத்தும்
நம்பரனுகத் துரியாதீதத்துயர்
நாதவிந்தாகித் தொனித்தலிங்கம் (௬௯)

ஆவுடைலிங்க மானந்தலிங்கஞ்சுந்த
அத்வைதவஸ்து வாயானலிங்கம்
பாவுடை நாவலர் போற்று தர்க்கேற்ற
பரமபதிகைலாச லிங்கம் (௫௰)

தன்னைமனம் வாக்குக்காயம் ஒருமித்துச்
சாற்றுங்கும்மி தமிழாற்றுதித்து
என்னைப் படைத்துங்காத்துங் கதிதந்திடும்
எந்தையே எம்பெருமானே யென்று (௫௧)

தோத்தரித்துப்பணிந்தே யெழுந்துமுக்காற்
சுற்றிவலமாகவந்து முன்னால்
வீற்றிருந்து கிருபா நிதிச்செல்வம்
விளைந்திடக்கும்மியடியுங்கடி (௫௨)

நேற்றிருந்தோரின்று காணாதவாழ்க்கை
நிசமென்று சிந்தையுள் ளெண்ணாமல்
மாற்றிப்பிர வாவரம் வேண்டி நிதம்
வாழ்த்திக்கும்மியடியுங்கடி (௫௩)

கோடிசனங்கள் வருவார்கள் திருக்
கூட்டஞ் சிவனடியார் வருவார்
பாடிடுமன்பர் மிகவருவார் தெய்வ
பத்தர் சித்தர் முத்தராய் வருவார் (௫௪)

அன்னங் கொடுக்கவருவார்கள் கோடி
ஆடை கொடுக்கவருவார்கள்
சொன்னங்கொடுக்க வருவார்கள் கோடி,
துன்பந்துலைத்திடவே வருவார் (௫௫)

மாதவஞ் செய்ய வருவார்கள் கோடி
மௌன நிஷ்டை செய்வோர் வருவார்

தோஷதகந்தீர்ந்திட யாவரையுங்கண்டு
தொழுதுகும்மியடியுங்கடி (ரு௬)

அவ்விடத்திலுள்ள சித்துமகிமை
அனந்தமுண்டு மதையாரறிவார்
வெவ்விடமாகிய பாவந்துலைந்திட்ட
மேலோரறிவார்கள் பெண்மணியே (ருஎ)

ஏதேதுவேணு மென்றாலுங்கொடுக்கும்
எழிதல்ல சொன்னேனிதன்மேலே
சூதானஞானதிருகு சுழிப்பாரை
தூரத்திலங்கு கணேசருண்டு (ருஅ)

அந்தயிடத்தை யெவருமணுகிடார்
ஆத்துமஞானிகள் தான்போவார்
சொந்தமென்றெண்ணிமற்றோர்போனாலவர்
சோர்ந்துமடிகுவார் துஷ்டர்களே (ருகூ)

அன்னதிற்கு மேலாமிக்கதூரமதி
லங்குசந்தண மகாலிங்கம்
என்னவிதத்தாலும் போகப்படாதென்
றியம்பினர்மேலவரென்ன வெனில் (௬௰)

தேவர்கள் மூவர்கள் மாதவத்தோருஞ்
சிறந்திருக்குஞ் சபைமாவனமாய்
ஆவலுடன் கெமனதியிருடிகள்
அங்குசஞ்சார மதாகுமதில் (௬௧)

ரோமவிருட்சங்கற்ற மரைப்பூந்தரு
வுற்றசுனைபேதிமெத்தவுண்டாம்
தாமதமேவுங்குணத்துடையோர்மேவிற்
சாம்பிணமாவரென்றே முனிவர் (௬௨)

சித்தர்கள் சொன்னது போலவுமிப்போ
திடமுற்றமானிடர் போனாலும்
மெத்தக்குதர்க்கங் களுண்டாகியவர்
வீணாயளிகுரார் பெண்ணரசே (௬௩)

ஆனதினாலங்கு செல்லவென்றாலுந்தன்
அன்புவிளைந்து அருள்மிகுந்து
தானவனானமகாலிங்க மூர்த்தி
சதானந்தபோதந் தழைந்தாக்கால் (௬௪)

ஏகிப்பரமபதம் பெருவாயன்றி
எவ்விதமுங்கிட்டமாட்டாது
பாகினிதான தினைமாவுந்தேனும்
பழவகைகந்த மூலபலங்கள் (௬௫)

மெத்தக்கிடக்கு மதனையருந்தியே
மேவும்பழியர்கள் கூட்டமுடன்
சித்தர்களாகச் சகலமணிமந்த்ரஞ்
செய்திடுவார் பிணிதீர்ந்திடவே (66)

மூலிகைமர்மங்க ளெல்லாந்தெறிகுவார்
மொய்குழலேயவ ரையடுத்துப்
பாலிலேவெண்ணை யெடுத்துநெய்யாகும்
பதம்போலறிந்துகொள் பெண்ணரசே (67)

சித்திரகூட மடாலயஞ்சாவடி
சேகரமாக விருக்குதங்கே
பத்தியுள்ளோர்கள் பரங்களுக்கன்னம்
பகுந்திடுவார்வெகு பாக்கியர்கள் (68)

வேண்டியசிற்றரச ரறண்மனையார்
விரும்புபங்களாக் கோரிகளில்

ஆண்டிபரதேசி யேளையோர்க்கன்னமும்
ஆடை நிதியுங் கொடுப்பார்கள் (69)

சங்குசேகண்டி நாதமணியோசை
தவில்பம்பை மத்தள ந்தித்திகளும்
எங்குமுளங்கும் பதினெட்டுவாத்யம்
இடருகள் தீர்ந்திட வேமுளங்கும் (70)

பிட்டில்தம்பூர்கஞ்ச ராவொடுமார்மோனிப்
பெட்டிசுருதிசேர் சுரதாளங்
கெட்டியுடனே சகலதொனிகளுங்
கேழ்க்கக்கேழ்க்க மிகவானந்தமே (71)

ஆனந்தங்கொண்டு அருள்வடிவாகி
அரஹரசம்போ சதாசிவமே
தானந்தமாகிய சச்சிதானந்த
தயாபரவென்னுந் தொனிமுளக்கம் (72)

இங்கிதநாடகற் றுமாவர்னங்க
ளிசைத்தமிழ்நாவர் கும்புகும்பாய்
சங்கீதம்பாடித் துதிக்குமுளக்கங்கள்
சாங்கோபசாங்க மகாசங்கம் (73)

சங்கநிறைந்திட்ட சாதுசனக்கூட்டஞ்
சாற்றமுடியுமோ பெண்ணரசே
அங்கமெல்லாந்திரு நீறுருத்ராட்சம்
அணிந்துசடைமுடி காவிதண்டு (74)

ஒட்டியாணஞ்சிவ யோகசபைக
ளுகந்தவர்செய்குவார் யோகநிஷ்டை
அட்டியில்லாமற் பணிந்திடும்பேர்கட்கு
ஆனவரங்கள் மிகக்கொடுப்பார் (75)

வாலவயதுப் பருவமடவார்
மணவாளர்தங்க ளுடன்கூடிப்
பாலர்கள்வேண்டி வருவார்களந்தப்
பாங்குதெரிந்துகொள் பெண்ணரசே (76)

இப்படியாகப் பலகோடிபேர்க
ளிசைந்ததிருவிளாக் கொண்டாட்டந்
தப்பிதமில்லாத ஆடியமாவாசை
தையமாவாசை வெகுமுளக்கம் (77)

மாதாமாதந்தோருஞ் சக்கிரமத்தன்று
வாள்த்துவரெல் லோருஞ்சேகரமாய்
பாதகமொன்றுந் தருகாதென்றேதமிழ்
பாடிக்கும்மி யடியுங்கடி (78)

இந்தவிதங்கண்டு சட்டைநாதரிட
மெல்லாவரம்பெற்றுக் கொண்டபின்பு
வந்துகூவலப் புரநகரிலங்கு
வாளுமடாலயஞ் சென்றிருந்து (79)

அங்கேநடக்கும் விசேஷமகாபுண்யம்
அன்னக்கொடி கட்டிவந்தோர்க்கு
தங்குமிடமுங் கொடுத்திடுவார்பசி
தாகத்துக்கன்ன மிகக்கொடுப்பார் (80)

எத்தனைகோடிபேர் வந்தாலுமவர்க்
கில்லையென்னமல் நல்லன்புடனே
சித்தமகிழவே போசனந்தந்து
சிறப்புடனல்லறஞ் செய்திடுவார் (81)

தானதர்மங்கள் நடத்திடுவார்வெகு
சாதுசனங்கள் தழைத்திடுவார்

ஞானசொரூப மகாலிங்கமூர்த்தியின்
நல்லருள்சேர்ந்திடு மவ்விடத்தில் (82)

ஞாலத்திலெங்கெங்குங் கண்டதில்லையிந்த
ஞாயமன்னக்கொடி யார்படைத்தார்
காலனைவென்ற மகாலிங்கமூர்த்தி
கடாட்சமென்றெண் ணுங்கள்கண்மணியே

கண்மணியேஎந்தன் பெண்ணரசே நீங்கள்
கண்ணாலேகண்ட கண்காட்சியெல்லாம்
எண்ணுமழியா திருந்திடப்பாட
லிசைத்துக்கும்மி யடியுங்கடி (84)

தக்கபுகழுமிகப் பெருகப்புத்ர
சந்தானமென்மேலு மேசெழிக்க
முக்காலும்பூசை செபதவவோமங்கள்
முன்னேரவென்று மனதிலெண்ணி (85)

பங்கம்வராமற் கணவருடன்சென்று
பைந்தொடியேநிதம் போற்றிசெய்து
எங்கள்குடிகுலம் வாழ்கவென்றேநினைந்
தென்னேரமுங் கும்மிவாழிசொல்லி (86)

ஆழிசூழுமுலகம்வாழியர
சாளுமிராசர் குலம்வாழி
வாழிசிவானந்த யோகிசொலுங்கும்மி
மாராதுயர்ந்திட வாழியென்றே (87)

கும்மியடிபெண்காள் கும்மியடிசிவ
கோமானைப்போற்றியே கும்மியடி
நம்மையாளுமகா லிங்கமூர்த்திபதம்
நாடிக்கும்மி யடியுங்கடி

உ

ஓம்

சிவமயம்

சரவணபவாய நமஹா.

# ஆனந்தக் களிப்பு

இந்தவுலகத்தின் மாயஞ் சற்றே
எடுத்துறைப்பேனினிக்கேளனியாயம் இந்த

தந்தைதாயிருவரும் நாடி மோக
சையோகலீலையிற் சார்ந்துமேகூடி
விந்துநாதமுறவாடிக் கரு
வீடடைந்தே ஜலரூபமாயோடிப்

பஞ்சபூதங்களின் றயவால் ஆறு
படைவீடதாகப் படைத்தானே பிர்மன்
தஞ்சமாய் மாதமோர்பத்தும் வைத்துத்
தாங்கினாள் கடவுளைத் தாயும் வ்ணங்கி

ஒருநாள்வயர் சற்றுளைந்து அன்று
ஒருவேளை யன்னமும் புசியாதிருந்து
மருநாளதிக வாதனையாய் அன்ய
மாதர்கள் கூடிமருத்துவம் பார்க்க

எத்தனைபேர் கூடினாலும் சுவாமி
இத்துன்ப நீக்கவோ யெங்களாலில்லை
கத்தனேயென்று பலர்வேண்டப் பூர்வ
கன்மவலை நீங்கியிக் காசினியில்வந்து

மூன்று நாள்ப் பூமியிலாத்தாள் முன்னே
முகத்திலும் விழியாமல் முலையுமுண்ணமற்
சான்றோர்கள் சேனையமுதூட்டப் பெற்ற
தாயும் விரதமாய்ச் சடலத்தைப்பேணி

ஒருநேரமன்னரவயருணவாய் நாம
ளுடலுயிர்க்காச்சிலது பிணி வந்திடாமல்
கருதியே நோம்பு பலநேர்ந்து மெத்தக்
கஷ்டம் பொறுத்தாளே யெல்லோருமறிய

நாமள்வயதேறி நாள் நாளாய் மிக்க
நடையுடைகள்பழகி வாய்மொழி பேசுபோதில்
நேமமுடன் மாதுர்பிதிரிருவர் காம
நினைவுற்று மப்பாலு நேயம்பொருந்த

மருதாங்கெற்பந்தரித்தும் பின்னால்
வந்ததேசோதரம் வழி வழி சிறந்து
ஒருவனோ பலவனோ தந்தை யாவ
ரோதவுமுடியாது பலவரை நிந்தை

உத்தமிமாதா சுமந்து பெற்ற
துண்மையென்றே நாமஞறுதி தெரிந்தோம்
பத்துவயதில் அவளிறந்து ஏமன்
பதிபுக்கியெப்பாடு படுவாளோ அறியோம்

மற்றுள்ள உறவின்முறையார்கள் இவனை
வளர்ப்பதற்கே தந்தையால் முடியாது
சற்றுநாமேல்ப் பார்த்து வருவோ மென்று
தாய்தந்தை வழியார்கள் தான் கொண்டுசெல்ல

சிலதுநாளவடம் வழர்ந்து கல்வி
சீராயுணர்ந்து நல்லறிவு சிறந்து
பலபேரு மேன்மையாய்ப் பேச முக்ய
பால்யவயது பருவம்வளர

மாதாவிழந்திட்ட தந்தை பால்ய
மாதர்மேற் காமமயக்கினில் வீழ்ந்து
ஏதாகிலும் பவிசிருந்தால் அவைக
ளெல்லாமிழந்து எழியவனுகி

இளையதார மணமுடிப்ப மனதி
லெண்ணிய வெண்ணமிரண்டி லொன்ருக
பளையவள்பெற்ற பிள்ளைக்கி நல்ல
பருவத்தினுக்கேற்ற பாவையை மணப்பக்

கையினிற் பொருளிலாததனல் வேறே
கடன்வாங்கிப் பின்னே களிக்கலாமென்று

பொய்சொல்லி மெய்சொல்லி மூத்த தமது
புத்திரற்குந் தனக்கும் பெண்கொணர்ந்து

மற்றுள்ள பிள்ளைகளுடனே மூத்த
மருமகள் தன்மனைவியொருமையாய் வாழ்ந்து
சற்றுகு தர்க்கமுண்டாகில் அதனற்
றந்தையுந்தானும் பகையாளியாக

மா்பியுமருமகளும் வேராய்க் குடிகள்
வைத்திடவேணுமென்றே சிலர் விளம்பத்
தாமிதமில்லாது கூட்டம் நான்கு
சாதியாரறிய வளக்குகள் பேசி

இருபேருந் தனியாயிருந்து நீங்க
ளெதுவேனு மவரவற்கேற்ற தொழில்செய்து
சிருவருக்குந் துணையதாகி வதுவை
செய்துவிட்டப்பாற் சிறந்திடீரென்று

பெரியோர்கள் சொல்வளுவாமல் மற்ற
பிள்ளைகட்குச் சிறப்புஞ் சிலதுசெய்து
உரியபொருள் கையிலில்லாது முன்னே
யுள்ளகடனேடு புதிதாய்ச் சேர்த்துவாங்கி

அவரவர்மனம்போல வீட்டில் நல்ல
அழகானபெண்டுகள் மிகவும் பொருந்தத்
தவர்களேதேனுமேயின்றி அண்ணன்
தம்பியென்ருெற்றுமை சார்ந்து வருநேரம்

நல்கால மில்லாததாலும் கடன்
நாளுக்குநாள் வட்டியேறுவதினுலும்
வல்லமையினுல் நிதமுளைத்துங் குடி
வாழ்க்கைக்கும் வட்டிக்கு மிஞ்சாததாலும்

செல்வஞ் சிறந்திடாதாலும் • மிக்க
சீற்றமுங்கோபமு நிறைவாய்ப் பொருந்தக்
கல்விகேள்விகளிருந்தாலும் பட்ட
கடனுங் குடும்பக் கவலையதாலும்

பிள்ளையுந்தானுமே நிதமும் உற்ற
பெண்டீர்களேசவும் பேசவுமனது
சள்ளையாய் வாழ்வதே வாழ்வு யின்னஞ்
சாற்றலாமதிகமாய்ச் சாற்றுவதிலென்ன

ஆயிரம்நாவுள்ள சேஷன் பாடி
அரங்கேற்றவென்றாலு முடியா விசேஷம்
மாயக்குடும்ப வாட்கையினை யின்னம்
வளுத்துவேன் கேளுங்கள் மானிட நீதி

மார்க்கங்கள் கொஞ்சமுமில்லை பெற்ற
மைந்தர்கள் நாலுபேராகில் அதிலோ
தீர்க்கமா யொருபிள்ளை கள்ளுக் குடியாய்த்
தேவடியாட்குஞ் சிலவு செய்திடுவான்

நடுவனே வர்த்தகமுதலாய் வேண்டும்
ஞாயவழி நின்று பலநாணையந்தேடக்
கெடுதலைக் கென்றொருவன் வீணாய் அதிக
கெருவமுங்கோபமுங் காமமே நினைவாய்

உல்லாசமோடிகள் செய்யக் கண்டு
ஒருவனிம் மூவர்க்குமிளையவன்கற்று
எல்லாந்தெரிந்தவன்போலக் கார்ய
மெல்லாம் பிரித்துக்கொடுவென்று வம்பு

உற்பத்தியானபேர் நால்வர் நாம
னுயர்வான கீர்த்திப் பிரதாபமாயிருக்க

நற்புத்தியுள்ளவன்போலும் மற்றோர்
தாணையமில்லாத கசடரைப்போலும்

எண்ணியே யுன்பேர்விலாசம் இட்டு
இஷ்டமுட நீ செய்துவருவது தகாது
திண்ணமாய் நீ சிலவழிக்க நாங்கள்
சிலவுக்கு மில்லாமலுன்னை யெதிர்பார்க்க

எங்களாலினி முடியாது பங்கு
எல்லாம் பிரித்துக்கொடுவென்று வீம்பு
சங்கையில்லாமலே செய்து மூத்த
தமையனென்றுஞ் சாதி வரமுறைகள் தவரி

மரியாதை யெல்லாமிழந்து துஷ்ட
வார்த்தையால் மடிபிடிவாதங்கள் வளர
சரியிலா வாழ்வதைக் கண்டு முதல்த்
தந்தமுதலாழிகள் பொருள்தனைக் கேட்க

வட்டிமுதலுஞ் சேர்த்தொழுங்காய்த் தாங்கள்
வாங்கிடும் பேர்கட்கு வரிசையாயீந்து
கெட்டியாய் வரவேண்டும் பொருளில்க் காசுங்
கிடையாமல் வீணாய்க் கெடுதலுண்டாக

நம்பிக்கை யெல்லா மிழந்து முன்னே
நடந்த வியாபாரவர்த்தக மிழந்து
தம்பிமாருந் தானுந்தந்தை வீட்டில்ச்
சண்டையுஞ் சச்சரவுமேல் மேல்வளரப்

பெண்டுகள் கொண்டைபிடிக்க அங்கே
பெற்றதகப்பனே வம்புவிளக்கத்
திண்டுமுண்டாகவே பேசித் தந்தை
செல்லுமிடந்தோருமைந்தரை யேசி

வாருங்கள் நாலுபேர் மனிதர்கள் வந்தென்
மனைவிக்கு மென்றனக் கன்னவஷ்திரமுந்
தாருங்களென்று கேட்டாக்கால் அவர்கள்
தருவதுந்தாராத செய்தி தெரிந்து

சிவில்முன்சிப்கோர்ட்டில் வாது செய்து
சிலவுதுகையுடன் வாங்குவோ நீங்கள் சாட்சி
தாவியேகேட்க வேண்டாங்காண் என்று
சம்பிரதாயம் பலவந்தமாய்க் கூற

அன்றூடம் வயருவளர்க்க வீட்டில்
அவரவர்கள் பெண்டுபிள்ளை காசுகேட்க
மன்ருட்ட மிகவுமுண்டாகி யாது
வரும்படியுமில்லாது மனநொந்து வாடச்

செல்வாக் குடும்பங்களெல்லாம் இழந்து
தெருவீதி செல்வதற்கும் வெட்கமுற்று
நல்வாக்குடைய மனையாள் உள்ள
நற்குண நற்செய்கை யெல்லாமழிந்து

கணவனை மதியாது மனதில் வேரே
கவனமும் பரபோக வாஞ்சையுண்டாகிப்
பணவாங்கு தொழில்தனைப்பழகி வேறு
பரதேசஞ்சென்றும் பலசாதி விசையம்

எல்லோரு மறியவே செய்யப் புருடன்
ஏகாந்தியாய்க் காவிவஷ்திரந் தரிக்கப்
பல்லோரும் வெளியில் நகைக்க யிந்தப்
படியாய்க் குடிகுலம் பாழாய்த்திகைக்க

நானுவிதத்திலும்மிடரு வந்த
ஞாயந்தெரிந்து நவிலுவோர் யாரு

ஏனோ பெருஞ்சந்தைக் கூட்டம் இதனில்
எத்தனை கோடானுகோடிபேர் வாழ்ந்தும்

அனுபவித்துந் தெரியாமல் மிக்க
அகமுமமதையுஞ் செல்வச்செருக்கும்
மனுமுறையென்று வேதங்கள் நான்கு
வருணமென்றும் பாவபுண்ணியமென்றும்

கூறிடும் வாக்கியந்தேர்ந்தும் தங்கள்
குலமுறையாக மநீதியுந் தவரி
மாறியேசெய்வது வழக்கம் இந்த
வாட்கையை நம்பி மடைத்தனமாக

என்வீடுவாசலென் சொத்து பாக்யம்
என்மனைவி யென்பிள்ளை யென்கார்யமென்றுந்
தன்னதாயாவையு மதித்துச் செய்தோர்
தான்கண்ட கண்காட்சி யாதுமேயில்லை

மாதாபிதாவுஞ் சதமோ நாமள்
மனையாட்டியாய்க் கொண்டுவந்தவள் சதமோ
சூதானமாய்ப்பெற்ற பிள்ளை தன்னைச்
சொந்தமாயெண்ணி வளர்க்கினுஞ் சதமோ

உற்ருருறவினர் சதமோ முன்பின்
உற்பத்தியான சகோதரஞ் சதமோ
பற்ருன வைப்பாட்டிசதமோ பூர்வ
பாக்கியம்ப விசும்பணமுஞ் சதமோ

பண்டுபதார்த்தஞ் சதமோ கற்ற
பழமறையாகம நூல்மொழி சதமோ
தொண்டுசெய்தே குருவிடத்திற் பெற்ற
சொல்லான மனிமந்த்ர செபமுஞ் சதமோ

மேல்மாடி யுப்பரிகைவீடும் அதின்
மேலேவிளங்கு சிங்காரமுகப்பும்
பால்மாடுகாலி கன்றுகளுங் கையிற்
பதித்தகணையாழி மோதிரஞ் சதமோ

சித்திர மிட்டிழைத்திட்ட வஜ்ர
செகஜோதி மின்னற்கடுக்கன் சதமோ
சத்தியமசத்திய மிரண்டாய்க் கண்டு
சாதிக்குமனு நீதி முறமை சதமோ

காதிற் பொன்னோலை சதமோ வந்த
காரியத்தனமுங் கணக்குஞ் சதமோ
சூதிற் கெலிக்கும் பணமுந் தேடுஞ்
சொல்லினுக் காயிரம் பொன்னுஞ் சதமோ

சத்திரஞ் சோலை சதமோ வைத்த
தர்மபரிபாலன மடாலையஞ் சதமோ
சித்துவிளை யாடுதல் சதமோ இந்தத்
தேகத்திலுள்ள பலமுஞ் சதமோ

எல்லாஞ் சதமென்று எண்ணி வாழ்ந்த
தெத்தனைபேரோ யிருப்பிடங் காணோம்
கல்லாலையஞ்செய்து வைத்த புண்ய
கனதன வான்கள் குடிகுலங் காணோம்

ஆலையங் கட்டினோர் கோடி நித்யம்
ஆயிரம் பேர்க்கன்ன மிட்டோர்கள் கோடி
சோலை வைத்தோர் கோடாகோடி தர்மஞ்
சொந்தமென்றெண்ணித் துணிந்தோர்கள்கோடி

எத்தனை கோடானு கோடி பேர்க
ளிறந்தாரே யல்லா திருந்தோர்க ளில்லை

சத்தசாகர மஷ்ட திசையும் ஏக
சக்ராதி பதியான சூராதி சூரன்

ஆயிரத்தெட் டண்டமுகடுந் தனதாய்
அரசாண்ட விரணியராவணன் முதலாய்த்
தேயத்தினிற் சக்ரவர்த்தி ராச
சிம்மாச னதிபதி மாண்டாரே யல்லால்

ஒருவரும் நிலைநின்று பூவில் தங்க
ளுண்மையுஞ் செல்வமுங் குடிகுலம் விளங்கிப்
பெருமை பெற்றோருமே யில்லை பின்னும்
பிறவியற்றுஞ் சொர்க்க பதவாழ்வு மில்லை

பத்தினி கற்புடைய ளென்றும் நித்யம்
பலபேரை யிச்சிக்கும் வேசியிவ ளென்றும்
சத்யவான் பொய்யுடைய னென்றும் புண்யம்
தாளாது செய்பவன் பாவியிவ னென்றும்

இன்னமும் பலவித வகுப்பில் ஒன்றில்
இரண்டாய் வகுத்தே யிருப்பது வளக்கம்
அன்னதிற் பெரிதுசிறிதெதுவோ இதனை
ஆராய்ந் துணர்ந்திடிற் பத்தினியு மாண்டாள்

விபசாரி யானவளு மாண்டாள் மற்ற
விவேகமுள புண்யவான் பாவிகளு மாண்டார்
உபமான மின்னமு மனந்தம் இதனி
லொன்றுசிறிதொன்றுபெரி தென்பதேகாணும்

எமதர்ம னொருவ னல்லாது வேறே
இருவருண் டென்ன வியம்பினோ ரில்லை
சமமாக யாதினு நிறைந்து சர்வ
சாட்சி யென்றே சிவன் தானாக நின்றான்

175117
175117
175

ஆன்தால் யோசித் துணர்ந்து பார்க்கி
லாத்மாவே நித்ய மநித்ய மித்தேகந்
தானான குருமூல பீடம் ஏக
சாட்சாத் பரப்ரம வெளியி லொளிவாகிச்

சமரச சுத்தசன் மார்க்கம் நித்ய
சாம்ராச்ய வானந்த சபையில் நடமாடுங்
குமரி யோங்காரி மகமாயி யோக
குண்டலி சிவானந்தி வாலையபி ராமி

சத்திபஞ் சாட்சரி யகோரி ஞான
தர்ப்பணை யிடப்பாகம் வைத்தசிவ சோதி
மூத்திவே தாந்த முதலான ஆதி
மூக்கண்ண னெம்பிரா னடியிணையை மேவி

என்னாளு மழிவிலா வின்பம் பெற்று
ஏகாந்த மௌன பதவாழ்வு மிகுத்துத்
தன்னாத்ம வடிவாகி மனமே எங்குந்
தானாய் நிறைந்ததே சாயூச்யம் வாழி

அன்புட னிதைப் படித்திட் டோர் மிக்க
ஆவலாய்க் கேட்பவர்கள் கேட்க நினைகின்றோர்
இன்பமே பெருகி யவர் வாழி இந்த
எண்டிசையி லுண்டான யெல்லோரும் வாழி

இந்த வுலகத்தின் மாயஞ் சற்றே
எடுத்துரைப் பேனினிக் கேளனியாயம்

---

ஆனந்தக்களிப்பு
முற்றிற்று.

உ ஓம்
சிவமயம்
சரவணபவாயநமஹா

# அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்குந் தெரிவிப்பது யாதெனில்.—

அடியிற்கண்ட புஸ்தகங்கள் விற்பனைக்கிதயாருய் இருக்கின்றன.

1. கைலையங்கிரிப் பதிகம்
2. சின்மயானந்த வடிவம்
3. சிதம்பரவுண்மையும் பதிகமும்
4. வரதராஜப்பெருமாள்பதிகமும்பஞ்சரத்தினமும்
5. சிவசுப்பிரமணியர் தோத்திரக்கொத்து
6. காமாக்ஷியம்மன் பதிகமும் பஞ்சரத்தினமும்
7. செண்பகவல்லியம்மன் விண்ணப்பப் பத்து
8. மனோமணி போதம்
9. சௌடாம்பிகை பதிகம்
10. சோணைமுத்தய்யா அருளானந்த பதிகம்
11. ஷை அட்டமாசித்து வரப்பிரசாதமாலை
12. மலையாண்டிக் கடவுள் பதிகம்
13. ஷை நவமணிப் போற்றிமாலை
14. கந்த வேள்மைந்தன் சொந்தமாலை.

இப்படிக்கி

வீரபத்திர சிவானந்த யோகியாகியும்
சோதிட சித்தாந்தியுமாகிய

**வீரபத்திரஞ்செட்டியாரவர்கள்.**

திருமங்கலம்